Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JULY 06, 2023

வியாழக்கிழமை ஜூலை 06, 2023 | ஒளி: 09 கதிர்: 034 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு | FREE

## கொத்து, ஃபிரைட் ரைஸ் விலை குறைந்தது



ஃபிரைட் ரைஸ் மற்றும் கொத்து ரொட்டி ஆகியவற்றின் விலைகள், புதன்கிழமை (05) முதல் அமலாகும் வகையில் 10 சதவீதத்தால் குறைக்கப்படும் என்று அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

எரிவாயு, எரிபொருள், கோதுமை மாவின் விலைகள் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து விலைகள் திருத்தம் செய்யப்படுவதாக குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



நீதிமன்றத்துக்கு அன்று சென்றிருந்தால்

# புலிகளுக்கு எதிரான யுத்தம் முடிந்திருக்காது

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை அழிப்பதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியில் எடுத்த தீர்மானத்தை, அப்போது எவரேனும் அடிப்படை உரிமைகள் மீறல் என்று நீதிமன்றம் சென்றிருந்தால், யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்திருக்க முடியாது என்று பொதுஜன பெரமுனவின் பொது செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இஞ்சி, பச்சைமிளகாய் ரூ. 1,000க்கும் கூடியது

கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் பச்சை மிளகாய் மற்றும் இஞ்சிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள காரணத்தால் பொதுமக்கள் தமது கறிகளில் பச்சைமிளகாய், இஞ்சி போன்றவற்றை சேர்த்துக் கொள்ள முடியாமல் பரிதவிக்கின்றனர்.

ஒரு கிலோ கிராம் பச்சைமிளகாய் 1,300 ரூபாயாகவும் ஒரு கிலோ கிராம் இஞ்சி 3 ஆயிரம் ரூபாயாகவும், ஒரு கிலோ கிராம் கரட் 500 ரூபாயாகவும் உயர்ந்துள்ளதாக மட்டக்களப்பு பொதுச் சந்தை மரக்கறி விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதிக்கு எதிரானவரா நீங்கள்?

### சபாநாயகரிடம் கிரியெல்ல கேள்வி

ஜனாதிபதியின் அழைப்புக்கு அமைய, அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கே எதிர்க்கட்சித் தலைவர் அரசாங்க நிதிக்குழுவுக்கு சென்றார் என்றும் தற்போது அந்த நடவடிக்கையை நிறுத்தும் வகையில் நீங்கள் செயற்படுகின்றீர்கள் என்றும் நீங்கள் ஜனாதிபதிக்கு எதிரானவரா என்றும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியுமான லக்ஷ்மன் கிரியெல்ல, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கேள்வி எழுப்பினார். நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவருக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். அவ்வாறான ஒன்று நடந்துவிடக்கூடாது என்பது போலவே நீங்கள் செயற்படுகின்றீர்கள் என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



## “ஒன்று அது; இன்றேல் இது”



மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் தமிழ் நீதியரசர்களிடம் வடக்கு, கிழக்கு வழக்குகளை ஒப்படைக்கலாம் என்றும் இல்லாவிட்டால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேன்முறையீட்டு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும் என்றும் இதன்மூலம் வழக்கு தாமதங்களை தவிர்க்கலாம் என்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யான சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இடைநிறுத்தப்பட்டவை செப்டெம்பரில் ஆரம்பம்

பலதரப்பு நிறுவனங்களின் வரவு செலவுத் திட்ட ஆதரவுடன் வெளிப்புற நிதியுதவி வர ஆரம்பித்ததும் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள பெருமளவிலான வேலைத்திட்டங்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று நம்புவதாக போக்குவரத்து மற்றும் வெகுசன ஊடக அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் புதன்கிழமை (05) இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் தெரிவித்தார்.



கடந்த வருடம், இலங்கை வங்குரோத்தான நாடாக அறிவித்ததை அடுத்து அனைத்து வெளிநாட்டு நிதியுதவிகளும் இடைநிறுத்தப்பட்டதாகவும் இதனால் பல்வேறு துறைகளில் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## 'மொட்டு'க்கு ரணிலை சரியாகத் தெரியாது



ரணிலை பற்றி மொட்டு கட்சியினருக்கு எதுவும் தெரியாது என்றும் நாங்கள் அவரைப் பற்றி நன்கு அறிந்துள்ளோம் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமக்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார், பாராளுமன்றத்தில் புதன்கிழமை (05) தெரிவித்தார்.

நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள் தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றிய போது இதைத் தெரிவித்த அவர் தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2

## சோளத்துக்கு ரூ.20 ஆயிரம்

சிறிய அளவிலான விவசாய தொழில் முனைவோர் பங்கேற்பு திட்டத்தின் கீழ், எதிர்வரும் பெரும்போகத்தில் சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு நிலத்தை பண்படுத்துவதற்காக ஓர் ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அம்பாறை, பதுளை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை, அநுராதபுரம் ஆகிய 5 மாவட்டங்களில் சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு மாத்திரமே இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

தொடர்ச்சி P2



## கேப்பாப்பிலவில் ஆர்ப்பாட்டம்

முல்லைத்தீவு, கேப்பாப்பிலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிக்க வலியுறுத்தி, காணிகளுக்குரிய பொதுமக்கள் புதன்கிழமை (05) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இராணுவ முகாமின் ஆரம்ப இடத்திலிருந்து ஆரம்பமாகி, பேரணியாக கேப்பாப்பிலவு இராணுவ முகாமின் பிரதான நுழைவாயிலை இந்த ஆர்ப்பாட்ட பேரணி வந்தடைந்தது.

விஜயரத்தினம் சரவணன்

தொழிலாளர்களுக்கு

## ரூ.12 இலட்சம் கோடி நட்டம் ஏற்படும்

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பின் மூலம் தொழிலாளர்களுக்கு ஏற்படப்போகும் நட்டம் 12 இலட்சம் கோடி ரூபாய் என்று வெரிடஸ் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (05) விசேட கூற்றை முன்வைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவித்த அவர், “வெரிடஸ் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பாக ஆய்வு மேற்கொண்டுள்ளது. அதில் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பின் மூலம் தொழிலாளர்களுக்கு ஏற்படப்போகும் நட்டம் 12 இலட்சம் கோடி ரூபாய் (12 ரில்லியன் ரூபாய்) எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



சுயாதீனமாக செயற்பட்டால் மாத்திரமே

## நீதிமன்ற கட்டமைப்பை மக்கள் நம்புவார்கள்



நீதிமன்றம் சுயாதீனமாக செயற்பட்டால் மாத்திரமே நாட்டு மக்கள் நீதிமன்ற கட்டமைப்பின் மீது நம்பிக்கை கொள்வார்கள் என்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (05) இடம்பெற்ற ‘நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள்’ தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்திலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

உள்ளூராட்சி தேர்தலை நடத்தாமல்

## மன்றங்களை மீளழைப்பது முரண்



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தலை நடத்தாமல் கலைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை மீளழைப்பது அரசியலமைப்புக்கு முரணானது என்று ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் எம்.பி.யான ஜயந்த கெடகொட மாநகர சபைகள் சட்டத்தை திருத்துவதற்காக தனிநபர் பிரேரணை ஒன்றை, பாராளுமன்றத்தில் புதன்கிழமை (05) கொண்டு வந்தார்.

தொடர்ச்சி P2

எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்டோர்

## குழுக் கூட்டங்களுக்கு செல்வது பொருத்தமற்றது

### சபாநாயகர் மஹிந்த அறிவிப்பு



பாராளுமன்றக் குழு கூட்டங்களுக்கு எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், சபை முதல்வர் ஆகியோர் செல்வது பொருத்தமற்றது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (05) நிகழ்த்திய சபாநாயகர் அறிவிப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“2023.06.29 அன்று நடைபெற்ற அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் கலந்து கொண்டதாகவும், இதன்போது அவருக்கு கருத்துத் தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் ஆகியோரால் 2023.06.30 அன்று நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தின் போதும் 2023.07.01 அன்று பாராளுமன்ற சபையிலும் எனது கவனத்துக்குக் கொண்டுவந்தனர். அது தொடர்பில் என்னிடம் தீர்மானமொன்றை கோரியிருந்தனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

நீதிமன்றத்துக்கு அன்று சென்றிருந்தால்

# புலிகளுக்கு எதிரான யுத்தம் முடிந்திருக்காது

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (05) இடம்பெற்ற 'நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள்' தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், "நாட்டின் மொத்த சனத் தொகைக்கும், நீதிபதிகளின் எண்ணிக்கைக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் உள்ளன. 2019ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 11 ஆக காணப்பட்டது. அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்துடன் அந்த எண்ணிக்கை 17 ஆக அதிகரிக்கப்பட்டது.

நீதிமன்ற நடவடிக்கையின் தாமத நிலை நாட்டின் முன்னேற்றத்துக்கு தடையாக அமைந்து விட கூடாது. நீதிமன்ற நடவடிக்கைகளை நவீனமயப்படுத்தினால் பல வழக்குகளை துரிதமாக முடிக்க முடியும்.

உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் அடிப்படை உரிமை மீறல் தொடர்பான மனுக்களின் விடயதானங்கள் வரையறை செய்யப்பட வேண்டும்.

விடுதலை புலிகள் அமைப்பை அழிப்பதற்கு அரசு கொள்கை ரீதியில் எடுத்த தீர்மானத்தை அப்போது எவரேனும் அடிப்படை உரிமை மீறல் என்று நீதிமன்றம் சென்றிருந்தால் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்திருக்க முடியாது. எனவே கொள்கை ரீதியில் அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களை நீதிபதிகள் விமர்சிப்பது நாட்டுக்கு பொருத்தமற்றது.

நீதிமன்றங்களில் தேக்கமடைந்துள்ள வழக்கு விசாரணைகள், நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைவதற்கு ஒரு தடையாக உள்ளன. வெளிநாடுகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்கு குறைந்தபட்சம் 4 ஆண்டு காலமேனும் செல்கிறது.

வழக்கு விசாரணைகள் தாமதப்படும் போது பாதிக்கப்படும் தரப்பினர் ஒட்டுமொத்த அரச கட்டமைப்பையும் கடுமையாக விமர்சிப்பார்கள். நடைமுறையில் அவ்வாறான தன்மையே காணப்படுகிறது" என்றார்.

## கொத்து, ஃபிரைட் ரைஸ் விலை குறைந்தது

விலை திருத்தம் வர்த்தகர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், ஆனால் அத்தியாவசிய பொருட்களின் விலை குறைவால் நுகர்வோர்களும் பயனடைய வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

அனைத்து திருத்தப்பட்ட விலைகளின் பட்டியலை அனைவரும் தெளிவாக பார்க்கும் வகையில் கடைகளில் காட்சிப்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

உணவு மற்றும் பேக்கரி பொருட்களை நியாயமான விலையில் கிடைக்கச் செய்ய வேண்டும் என்றும், இல்லையெனில் சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் ஹோட்டல்களில் நீண்ட காலத்துக்கு வியாபாரம் இல்லாமல் போகும் என்றார்.

## இஞ்சி, பச்சைமிளகாய் ரூ. 1,000க்கும் கூடியது

தற்போது பச்சை மிளகாய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், ஒரு கிலோ பச்சை மிளகாயை 1,200 ரூபாய்க்கு கொள்வனவு செய்து 1,300 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றோம் என்று விற்பனையாளர்கள் குறிப்பிட்டனர்.

அதேவேளை சந்தையில் ஒரு கிலோ கிராம் இஞ்சி 3 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்வதுடன் சந்தையில் ஒரு கிலோ கிராம் இஞ்சியை கொள்வனவு செய்ய முடியாத நிலையில், தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அவ்வாறே கரட் ஒரு கிலோ கிராம் 500 ரூபாயாகவும், உருளைக்கிழங்கு 240 ரூபாயாகவும் பெரிய வெங்காயம் 150 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

இவ்வாறான தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு காரணமாக தமது உணவில் பச்சைமிளகாய், இஞ்சி போன்றவற்றை சேர்த்துக் கொள்ள முடியாமல் பொதுமக்கள் பரிதவிக்கின்றனர்.

## ஜனாதிபதிக்கு எதிரானவரா நீங்கள்?

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (05) இடம்பெற்ற சபாநாயகரின் அறிவிப்பில், பாராளுமன்ற குழுக்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர், அரசதரப்பு பிரதமகொறடா, சபை முதல்வர், பிரதி சபாநாயகர் ஆகியோர் செல்வது நாகரிகம் இல்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. ஒழுங்கு பிரச்சினை ஒன்றை எழுப்பி கூறுகையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவருக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். அதன் பிரகாரமே எதிர்க்கட்சித் தலைவர் அரசாங்க நிதிக்குழுவுக்கு சென்றார். அதற்கு அரச நிதிக்குழுவின் தலைவரால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது உங்களது அறிவிப்பு நாட்டை அபிவிருத்தி செய்ய ஜனாதிபதி விடுத்த அழைப்புக்கு முரணாகவே உள்ளது.

ஜனாதிபதிக்கும் உங்களுக்குமிடையில் பிரச்சினை, முரண்பாடு ஏதாவது இருக்கிறதா? ஏனெனில் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்த நிலையில், தற்போது அந்த நடவடிக்கையை நிறுத்தும் வகையில் நீங்கள் செயற்படுகின்றீர்கள். எனவே நீங்கள் ஜனாதிபதிக்கு எதிராக செயற்படுபவராகவே உள்ளீர்கள்" என்றார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர், "எனது அறிவிப்பில் அவ்வாறு எதுவும் தெரிவிக்கப்படவில்லை. அறிக்கையை முழுமையாக வாசித்து பாருங்கள் புரியும்" என்றார்.

## "ஒன்று அது; இன்றேல் இது"

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (05) இடம்பெற்ற 'நீதிமன்றங்களில் நீதி விசாரணைகளில் தாமதம் மற்றும் அதற்கான காரணங்கள்' தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய போதே மேற்கண்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு வரும் குற்றவியல் வழக்கு கோவைகள் தொடர்பில் தாமதங்கள் ஏற்படுகின்றன. இதற்கு வடக்கு, கிழக்கு நீதிமன்றங்களில் தமிழ் மொழியில் வழக்குகள் நடப்பதே காரணம்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அந்த கோவைகள் வரும்போது, ஆங்கில மொழிபெயர்ப்புகளில் தாமதம் ஏற்படுகின்றது. ஆனால், மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் தமிழ் நீதியரசர்கள் உள்ளனர். அவர்களிடம் அந்த வழக்குகளை ஒப்படைக்கலாம். இல்லாவிட்டால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேன்முறையீட்டு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும். இதன்மூலம் வழக்கு தாமதங்களை தவிர்க்கலாம்" என்றார்.

இதன்போது பதிலளித்த நீதி அமைச்சர், "நீதிமன்றங்களில் மொழிபெயர்ப்பாளர்களுக்கு நிலவும் பற்றாக்குறையே இதற்கு காரணம். இதனை தவிர்க்க வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன" என்றார்.

தொடர்ந்தும் உரையாற்றிய சாள்ஸ் எம்.பி, "அதிகமான வழக்குகள் பொய்யாக போடுவதாலும் இவ்வாறாக தாமதங்கள் ஏற்படுகின்றன.

நீண்ட காலமாக சிறையில் உள்ள அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து ஜனாதிபதியுடனும் உங்களுடனும் பேசியுள்ளோம். அண்மையில் தேவதாசன் என்ற புற்றுநோய் நோயாளி விடுதலை செய்யப்பட்டார். அதற்கு அரசுக்கு நன்றி கூறுகின்றோம்.

இதேவேளை, அரசியல் கைதிகள் பலருக்கு புதிதாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்" என்றார்.

## இடைநிறுத்தப்பட்டவை செப்டெம்பரில் ஆரம்பம்

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பொருளாதாரம் படிப்படியாக ஸ்திரத்தன்மை அடைந்து வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்களும் வெற்றியடைந்ததாகவும் உள்நாட்டு கடனை மேம்படுத்தும் திட்டத்தை அரசாங்கம் வெளியிட்டுள்ளதுடன், விரிவான கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பாக உள்ளூர் மற்றும் சர்வதேச பங்காளிகளுடன் கலந்துரையாடி வருவதாகவும் தெரிவித்தார்.

செப்டெம்பர் மாதத்துக்குள் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தில் இலங்கையை திவால்நிலையிலிருந்து விடுவித்து பாரிய நித்திய நிதியளிப்புக்கான கதவுகளைத் திறக்கும் உடன்படிக்கைக்கு வரமுடியும் என்று நம்புவதாகவும் பின்னர் இடைநிறுத்தப்பட்ட திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றார்.

## ரூ.12 இலட்சம் கோடி நட்டம் ஏற்படும்

அத்துடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பும்போது, தொழிலாளர்களின் எந்தளவு தொகை குறைக்கப்படுகிறது என்பதை விளங்கிக்கொள்ளலாம்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பின் மூலம் வேலை செய்யும் மக்களின் பணம் எந்தளவு குறைவடையும் என்பது தொடர்பாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரிகள் எந்தவித ஆய்வும் மேற்கொள்ளவில்லை.

ஆனால் எமது நாட்டின் தனியார் ஆய்வு நிறுவனமான வெரிடஸ் ஆய்வு நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் 12 இலட்சம் கோடி ரூபாய் குறைக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் என்றவகையில், பாராளுமன்ற செயற்குழுவுக்கு சென்று அது தொடர்பாக கேள்வி எழுப்புவதற்கு எனக்கு உரிமை இல்லையா? எனக்கேள்வி எழுப்பினார்.

இதற்கு சபாநாயகர், "நீங்கள் தெரிவிக்கும் அதிகாரிகள் அனைவரையும் உங்கள் காரியாலயத்துக்கு அழைத்து கேள்வி கேட்பதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. அதனால் பாராளுமன்ற செயற்குழுவுக்கு செல்லாமல் தனிப்பட்ட ரீதியில் அவர்களை அழைத்து கேள்வி எழுப்பலாம்" என்றார்.

சபாநாயகரின் பதில் தொடர்பில் சஜித் பிரேமதாஸ தெரிவிக்கையில், "நீங்கள் உத்தரவிட்டதன் பிரகாரம் நான் செய்கிறேன். ஆனால் நிறைவேற்று ஜனாதிபதியின் ஆலோசனை கிடைத்து, அதனை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கக்கூடாது. அத்துடன் நான் அரச அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்து, அவர்கள் வரவில்லை என்றால், அது எனது சிறப்புரிமை மீறும் நடவடிக்கை. அந்த பொறுப்பை சபாநாயகரான நீங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றார்.

## 'மொட்டு ரணிலை' சரியாக...

"மத்திய வங்கி பிணைமுறி கொள்ளையை மக்கள் முன் வெளிப்படுத்தியவர் தான் என்றே பந்துல குணவர்தன தேர்தலில் போட்டியிட்டார். ரணிலுக்கு பிரதமர் பதவி வழங்க நாங்கள் பைத்தியங்கள் அல்ல என்று ரோஹித அபேகுணவர்தன கூறினார். ரணில் சிறைக்கு செல்லும் நாளில்தான் நான் உறங்குவேன் என்று கூறிய மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோரே கடன் மறுசீரமைப்பு சட்டத்தை ஆதரிக்கின்றனர். இவர்கள் எப்படி நாட்டை கட்டியெழுப்ப போகின்றனர். ரணிலை பற்றி மொட்டு கட்சியினருக்கு எதுவும் தெரியாது. நாங்கள் நன்கு அவரைப் பற்றி அறிந்துள்ளோம். கடன் பெறவும் விற்கவுமே தெரியும். இந்நிலையில் கடன் மறுசீரமைப்பு சட்டம் எவ்வளவு சிக்கலானது என்று புரியும்" என்றார்.

## சோளத்துக்கு ரூ.20 ஆயிரம்

அத்துடன், சோளச் செய்கைக்கு தேவையான கிருமிநாசினிகள், உரங்கள் என்பனவும் இந்தத் திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கப்படவுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சிறிய அளவிலான விவசாய தொழில் முனைவோர் பங்கேற்பு திட்டத்தின் கீழ், இந்த 5 மாவட்டங்களிலும் 22 ஆயிரம் ஏக்கரில் சோளச் செய்கையை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

## நீதிமன்ற கட்டமைப்பை மக்கள் நம்புவார்கள்

அங்கு மேலும் தெரிவித்த அவர், "பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள் முறையாக செயற்படுத்தப்பட வேண்டும். நாட்டின் பொருளாதார படுகொலையாளர்கள் சுதந்திரமாக சுற்றித் திரியும் போது பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய முடியாது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களும் நாட்டின் மீது நம்பிக்கை கொள்ளமாட்டார்கள். கடந்த காலங்களில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருகை தரும் போது பசில் ராஜபக்ஷ அதிகாரத்தில் இருக்கிறாரா, இல்லையா என்று பார்ப்பார்கள். அவர் இருந்தால் திரும்பி சென்று விடுவார்கள். இது நாட்டு மக்கள் அறிந்த உண்மையே. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எவருக்கும் கப்பம் செலுத்தாமல் இலங்கையில் தமது முதலீடுகளை செய்வது உலக அதிசயம்.

நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியிலும் கப்பம் பெறும் கலாசாரம் இல்லாதொழிக்கப்படவில்லை. நீதிமன்றம் சுயாதீனமாக செயற்பட்டால் மாத்திரமே நாட்டு மக்கள் நீதிமன்ற கட்டமைப்பின் மீது நம்பிக்கை கொள்வார்கள்.

மரண தண்டனை குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்டவர்கள், கப்பம் பெற்றவர்கள் பல வழிமுறையில் சட்டத்தில் இருந்து தப்பித்து அமைச்சரவையில் அங்கம் வகிக்கிறார்கள்.

ஆனால், சாதாரண மக்கள் சிறு குற்றம் செய்தாலும் அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதுவே இன்றைய உண்மை" என்றார்.

## மன்றங்களை மீளழைப்பது முரண்

ஆனால், மாநகர சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்காக ஜயந்த கெடகொட எம்.பி. முன்வைத்த தனிநபர் பிரேரணைக்கு எதிர்க்கட்சி எம்.பிக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதன்போதே கலைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளை மீளழைப்பது ஜனநாயகத்துக்கு முற்றிலும் எதிரானது. எனவே, 'காகத்தின் நிழலின் செயற்பாட்டை' நீதிமன்றத்தில் நிச்சயம் சவாலுக்கு உட்படுத்துவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இதன்போது எழுந்த ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி ஹர்ஷ டி சில்வா, "உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தலை நடத்தாமல் கலைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை மீளழைப்பது அரசியலமைப்புக்கு முரணானது. இதற்கு பாராளுமன்றம் எவ்வாறு அனுமதி வழங்கும்" என்று சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர், "தனிநபர் பிரேரணை சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, ஆகவே நீதிமன்றத்தை நாடி உங்கள் பிரச்சினையை தீர்த்துக் கொள்ளுங்கள்" என்றார்.

## குழுக் கூட்டங்களுக்கு செல்வது பொருத்தமற்றது

இது தொடர்பில் நிலையியல் கட்டளைகள் மற்றும் பாராளுமன்ற மரபுகள் என்னால் ஆராயப்பட்டன.

அதற்கமைய, பாராளுமன்ற சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய பதவிகளுக்கு பாராளுமன்றக் கட்டமைப்புக்குள் சிறப்புரிமைகள் காணப்படுகின்றமையாலும் இந்தப் பதவிகளை வகிக்கும் உறுப்பினர்களுக்குக் குழுக்களின் அலுவல்கள் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு பரந்த இடம் காணப்படுகின்றமையாலும், அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பதவிக்கு நிலையியல் கட்டளைகள் 121(1) இன் பிரகாரம் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான கூட்டங்களுக்கு எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது மேலே குறிப்பிடப்பட்ட பொறுப்பான பதவி வகிப்பவர்களை அழைப்பதோ பொருத்தமற்றது என்பதால் குறித்த கூட்டத்தின் தகவல்களை எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்குவதற்குக் குழுவின் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்றார்.

நிலாவெளி சுற்றுலாத் துறை சங்கத்துக்கு

# களங்கம் ஏற்படுத்திய நபரை கைது செய்க

ஹஸ்பர்

நிலாவெளி கரையோரம் தொடக்கம் புறாத்தீவுக்கு படகு சேவையை மூவினமும் இணைந்து, நடத்திவரும் நிலையில், போலியான வீடியோவை சமூக வலைத்தளத்தில் பரப்பி, சங்கத்துக்கு களங்கத்தை ஏற்படுத்தியவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்காமை கவலையளிக்கிறது என, நிலாவெளி உல்லாச பிரயாணிகளின் படகு மற்றும் சேவை கூட்டுறவு சங்கத்தின் தலைவர் எஸ்.எம் முபீன் தெரிவித்தார்.

திருகோணமலையில் திங்கட்கிழமை (03) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:




வனஜீவராசி திணைக்கள முன்னாள் அதிகாரி ஒருவர், தனது மனைவின் பெயரில் பாஸ் ஒன்றை வைத்து, படகு சேவையை முன்னெடுப்பதுடன் எங்களுக்கு எதிராக, போலியான வீடியோவை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றி, அபகீர்த்தி ஏற்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் குச்சவெளி பொலிஸ், பிரதேச செயலகம், வனஜீவராசிகள் திணைக்களம், மாவட்ட செயலாளர் உள்ளிட்டவர்களுக்கு முறைப்பாடுகளை பதிவு செய்த போதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கடந்த 20 வருட காலமாக, சுற்றுலாப் பயணிகளுக்கான படகு சேவையை முன்னெடுக்கிறோம். இத்தொழிலை நம்பி 150 குடும்பங்கள் வாழ்கின்றன. போலி வீடியோ தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனத்தில் கொண்டு, நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கின்றேன் என்றார்.

கிளி. செயலக விளையாட்டு உத்தியோகத்தர்

## தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதி

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்ட செயலக விளையாட்டு உத்தியோகத்தரும் யூடோ பயிற்றுவிப்பாளருமான பசுபதி ஆனந்தராஜா, நேற்று முன்தினம் (04) மாலை கடமை முடிந்து வீடு சென்று கொண்டிருந்த போது, மோட்டார்சைக்கிளில் அவரை பின் தொடர்ந்து வந்த இருவர், கடுமையாகத் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.



தாக்குதலில் படுகாயமடைந்த அவர், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகிறார்.

அண்மைய நாள்களில், அதிகார துஷ்பிரயோகங்கள் சம்பந்தமாக முகநூலில் அவர் எழுதிய விடயங்களின் பின்னணியில் இந்தத் தாக்குதல் சம்பவம் நடைபெற்றிருக்கலாம் என அவருடைய குடும்பத்தினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

11ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு:

## அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் சென்னை பயணம்

எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு தமிழ் நேசன் அடிகளார், சென்னையில் நடைபெறவுள்ள 11ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பங்குபற்றுவதற்காக சென்னைக்கு பயணமானார்.

ஜூலை ஏழாம் திகதி தொடக்கம் ஒன்பதாம் திகதி வரை சென்னை, ‘ஆசியவியல்’ நிறுவன வளாகத்தில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில், இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு ஐரோப்பிய தமிழ் அறிஞர்களின் தமிழியல் ஆய்வுகள் தொடர்பான இரண்டு ஆய்வுக் கட்டுரைகளை அடிகளார் சமர்ப்பிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## ஒருதொகை ‘ஐடி’களுடன் ஒருவர் கைது

ரஞ்சித் ராஜபக்ஷ

ஆட்பதிவுத் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட ஒருதொகுதி தேசிய அடையாள அட்டைகளை தம்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், ஹட்டன் பொலிஸ் குற்ற விசாரணை பிரிவின் அதிகாரிகளால் ஒருவர் புதன்கிழமை (05) கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹட்டன் உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலும் வசிக்கும் தோட்டத்தொழிலாளர்கள் மற்றும் பிரதேசவாசிகளின் தேசிய அடையாள அட்டைகளை அவர், தம்வசம் வைத்திருந்துள்ளார்.

ஹட்டன், வில்பிரட்புர பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட இரண்டு பிள்ளைகளின் தந்தையான 58 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், வங்கி அட்டைகளை ஆகியவற்றை பிணையாக வைத்துக்கொண்டு அதிக வட்டிக்கு பணம் கொடுக்கும் வர்த்தகத்தில் ஈடுபடும் நபரென விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.



அத்துடன், பணம் பெற்றுக் கொண்டவர்களின் பெருவிரல் அடையாளம் வைக்கப்பட்டுள்ள வெற்றுக்கடதாசிகள் சிலவும் கையொப்பம் இடப்பட்டுள்ள கடதாசிகள் சிலவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

தேசிய அடையாள அட்டை காணாமல் போவது தொடர்பிலான ஹட்டன் பொலிஸ் நிலையத்துக்கு நாளாந்தம் கிடைக்கும் முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதை அடுத்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணைகளின் போதே, இந்த வர்த்தகம் அம்பலமானது.

இதையடுத்து ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட தேடுதல் உத்தரவுக்கு அமைய, சந்தேகநபரின் வீட்டை சோதனைக்கு உட்படுத்திய போதே, ஒரு தொகை தேசிய அடையாள அட்டை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

## நிந்தவூர் பொலிஸ் நிலையம் திறந்து வைப்பு



பாறுக் ஷிஹான்

நிந்தவூர் பிரதேசத்தில் இடமாற்றப்பட்ட புதிய பொலிஸ் நிலையம், கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியில் நேற்று (05) வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ. எம் நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயசிறி பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

நிகழ்வில், அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம். டி ஜெயந்த ரத்னாயக்க, கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம். எல். புத்திக, நிந்தவூர் பிரதேச செயலாளர் எம். அப்துல் லத்தீப், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனீபா, நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.எல்.எம் றயீஸ் உட்பட சர்வமத தலைவர்களும் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

## இராகலை தீயில் 20 வீடுகள் சேதம்

ஆ.ரமேஸ்

இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராகலை கீழ் பிரிவு தோட்டத்தில் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதனால், 20 குடியிருப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தீயை அணைப்பதற்காக பொதுமக்கள் பெரும் பிரயத்தனம் செய்துகொண்டிருந்த போதே, அந்த லயத்தின் கூரையின் மீதேறிய இளைஞன் கீழே விழுந்து காயமடைந்துள்ளார்.

இரண்டு பக்கங்களும் குடியிருப்புகளைக் கொண்ட இலக்கம் (06) தொடர் வீட்டு லயத்தில் இந்தத் தீ விபத்து



சம்பவம் புதன்கிழமை காலை 10.30 மணியளவில் இடம்பெற்றதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை. அதேநேரத்தில் இராகலை பிரதேசத்தில் கடும் காற்றுடன் மழையும் பெய்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா ஊடக அமையத்தை வலுவூட்டும் ஒப்பந்தம் கைச்சாத்து

க. அகரன்

வவுனியா ஊடக அமையத்துக்கும் USAID நிறுவனத்துக்கும் இடையில் வலுவூட்டல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம், மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ சரத்சந்திர, உதவி மாவட்ட செயலாளர் திருமதி சபர்ஜா முகுந்தன், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன் ஆகியோர் முன்னிலையில், நேற்று முன்தினம் (04) கைச்சாத்திடப்பட்டது.


வவுனியா ஊடக அமையம் சார்பாக அதன் தலைவர் ப. கார்த்தீபனும் USAID நிறுவனத்தின் சார்பாக அதன் திட்டப் பணிப்பாளர் ஜெ. கார்த்திகேயனும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.




வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களை வலுப்படுத்தல், மாவட்ட மக்களின் காணிப் பிரச்சினை உள்ளிட்டவற்றை தீர்வு நோக்கி நகர்த்துதல், தென்பகுதி ஊடகவியலாளர்களுடன் தொழில்சார் தொடர்புகளை பேணல், தெரிவு செய்யப்பட்ட பாடசாலையில் ஊடகம் தொடர்பில் அறிவூட்டல் என்பவற்றை நோக்கமாக கொண்டு குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

VERITÉ RESEARCH Strategic Analysis for Asia

தேசத்தின் மனநிலை




அரசாங்கம் மீதான மக்களின் அங்கிகாரம்

## ஜூனில் 21% இரட்டிப்பாகியது

வெரிடே ரிசர்ச்சின் கேலப் பாணியிலான (Gallup style) சமீபத்திய ஆய்வு சுற்றின் ‘தேசத்தின் மனநிலை’ கருத்துக்கணிப்பின்படி, 2023 பெப்ரவரி மற்றும் 2022 ஒக்டோபர் ஆகிய இரண்டு மாதங்களினதும் 10% ஆக இருந்த அரசாங்கம் மீதான மக்கள் அங்கிகாரத்தின் மதிப்பீடு, 2023 ஜூன் இல் 21% ஆக இரட்டிப்பாகியுள்ளது.

கணக்கெடுப்பின்படி, நாட்டின் நிலை குறித்த திருப்தி உயர்ந்துள்ளது, ஜூன் மாதத்தில் அது 12% ஐ எட்டியுள்ளது. பெப்ரவரி மற்றும் ஒக்டோபர் ஆகிய இரண்டு மாதங்களிலும் (-) 78 ஆக மற்றும் முந்தைய அளவீடுகளுடன் ஒப்பிடுகையில் பொருளாதாரம் மீதான நம்பிக்கை மேம்பட்டிருந்தாலும், அது இன்னும் எதிர்மறை (-) 44 இல் தான் இருக்கின்றது.

வெரிடே ரிசர்ச் அவ்வப்போது ‘தேசத்தின் மனநிலை’ என்ற பொதுக் கருத்துக் கணிப்பை நடத்துகிறது. இது நாடு முழுவதும் தேசியளவிலான பிரதிநிதித்துவத்தை கொண்ட பதில்களின் மாதிரியை அடிப்படையாகக் கொண்டது. இக் கணக்கெடுப்புக்கான மாதிரி மற்றும் முறையானது, 95% நம்பிக்கை இடைவெளியில் 3% க்கும் குறைவான அதிகபட்ச பிழை வரம்பை கட்டுப்படுத்தும் வகையில் ஆய்வுகளின் தங்க நியம விதிகளை சந்திக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### அரசாங்கம் மீதான மக்களின் அங்கிகாரத்தை மதிப்பிடுதல் – 21%

“தற்போதைய அரசாங்கம் செயல்படும் முறையை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா இல்லையா?” என்ற கேள்விக்கு, பதிலளித்தவர்களில் 21% பேர் அதை ஆமோதிப்பதாகக் கூறினர். (- 2.68% பிழை வரம்புடன்). மேலும், பதிலளித்தவர்களில் 18% பேர் அரசாங்க நடவடிக்கைகள் குறித்து தங்களுக்கு தெளிவான கருத்து எதுவும் இல்லை என்று கூறியுள்ளனர்.

### இலங்கை மீதான திருப்தி –12%

பொதுவாக, தற்போது இலங்கையில் நிகழ்ந்து கொண்டிருப்பவைகள் குறித்து நீங்கள் திருப்தியடைகிறீர்களா, இல்லையா?” என்ற கேள்விக்கு பதிலளித்தவர்களில் 12% பேர் மட்டுமே இலங்கையின் நிலைமையில் திருப்தி அடைவதாக தெரிவித்துள்ளனர்.

(- 2.21% பிழை வரம்புடன்) இம் மதிப்பீடு 2023 பெப்ரவரியில் 4% ஆகவும், 2022 ஒக்டோபரில் 7% ஆகவும் இருந்தது.

### பொருளாதாரத்தின் மீதான

> “தற்போதைய அரசாங்கம் செயல்படும் முறையை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா இல்லையா?” என்ற கேள்விக்கு, பதிலளித்தவர்களில் 21% பேர் அதை ஆமோதிப்பதாகக் கூறினர். மேலும், பதிலளித்தவர்களில் 18% பேர் அரசாங்க நடவடிக்கைகள் குறித்து தங்களுக்கு தெளிவான கருத்து எதுவும் இல்லை என்று கூறியுள்ளனர்

### நம்பிக்கை / எதிர்மறை (–) 43.8.

பொருளாதார நம்பகத்தன்மையை கணக்கிடுவதற்கு தற்போதைய பொருளாதார நிலைமைகள் மற்றும் அதன் வழிமுறைகளை மதிப்பிடும் பல தேர்வு வினாக்கள் பயன்படுத்தப்பட்டன. மதிப்பெண் எதிர்மறை (-) 100 முதல் நேர்மறை (+) 100 வரை இருக்கலாம்.

பூஜ்ஜியத்திற்கு மேல் உள்ள மதிப்பு, பெரும்பான்மையானவர்கள் பொருளாதாரத்தை எதிர்மறையாகப் பார்க்காமல் நேர்மறையாகப் பார்க்கிறார்கள் என்பதைக் குறிக்கிறது.

அனைவரும் பொருளாதாரம் மோசமான நிலையில் இருப்பதாகவும் (நல்லது அல்லது சிறந்த நிலைக்குப் பதிலாக) அது மோசமாகி வருவதாகவும் (சிறந்த நிலைக்குப் பதிலாக) கருதினால், அதற்குரிய மதிப்பெண் (-) 100 ஆக இருக்கும்.

ஜூன் 2023 இல், பதிலளித்தவர்களில் 0.8% பேர் பொருளாதார நிலைமையை சிறப்பானதாகவும், 26.6% பேர் சிறந்த பொருளாதாரம் என்றும், 28.8% பேர் மேம்பட்டு வருகின்ற பொருளாதாரம் என்றும் மதிப்பிட்டுள்ளனர். இதன் விளைவாக பெறப்பட்ட மதிப்பெண் எதிர்மறை (-) 43.8 (எதிர்மறை 44 என வட்டமிடப்பட்டது). 2023 பெப்ரவரி மற்றும் 2022 ஒக்டோபர் ஆகிய இரண்டிலும் இம் மதிப்பீடு (-) 78 ஆக இருந்தது.

### ‘தேசத்தின் மனநிலை’ கருத்துக்கணிப்பை நடைமுறைப்படுத்தல்

‘தேசத்தின் மனநிலை’ அரசாங்கம், நாடு மற்றும் பொருளாதாரம் தொடர்பாக மக்களின் அங்கிகாரம், திருப்தி மற்றும் நம்பிக்கையை மதிப்பிடுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. வெரிடே ரிசர்ச் மூலம் ஒருங்கிணைக்கப்பட்ட கணக்கெடுப்பு கருவியின் ஒரு பகுதியாக இக் கருத்துக்கணிப்பு நடத்தப்படுகிறது. இதன்மூலம் இலங்கையர்களின் கருத்துகளை ஆய்வு செய்ய மற்ற நிறுவனங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்.

# இனவாத சிந்தனைகள் நெருடும் வரையிலும் புண் ஆறாது

உயர்நீதிமன்றத்தில் வழக்கு அமர்வுக்காக பிரதமர் நீதியரசர் தலைமையிலான நீதியரசர்கள் குழாம், மன்றுக்குள் நுழைந்த போது, அங்கு அமர்ந்திருப்போர், நீதிமன்ற கலாசார முறைமையின் பிரகாரம் எழுந்து நின்று மரியாதை செலுத்தவேண்டும்; அதுவே வழக்கமாகும்.

எனினும், ஆசனங்களில் அமர்ந்திருந்த தேரர்கள் எழுந்து மரியாதை செலுத்தாமையை அடுத்து, அன்று பிரதம நீதியரசராக இருந்த சரத் என்.சில்வா, தேரருக்கு சார்பாக ஆஜராகியிருந்த சட்டத்தரணியிடம், "நீதிமன்றச் சம்பிரதாய நடைமுறைகளை சகலரும் பின்பற்ற வேண்டும்" என அறிவுறுத்தியிருந்தார்.

நீதியரசரின் கருத்தை அமோதிக்கும் வரையில், "சட்டத்தையும் நீதிமன்றங்களையும் சகல பிரஜைகளும் மதித்து நடக்க வேண்டும். பௌத்த பிக்குமார்களும் நீதித்துறைக்கு மதிப்பளிக்கக் கடமைப்பட்டவர்கள்" என மலவத்தை பீடாதிபதியும் அஸ்கிரிய பீடாதிபதியும் அக்காலத்தில் அறிவுறுத்தியிருந்தனர்.

எனினும், பௌத்த பிக்குமார்களில் பலரும் நீதிமன்றத்தையும், அதன் தீர்ப்பையும் அவமதிக்கும் வகையிலேயே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி, பௌத்தவிகாரை அமைக்கும் பணிகளை பிக்குமார்களே முன்னின்று நடத்தினர்.

என்ன நடக்கிறது என்பதை ஆராய்வதற்காக, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா, குருந்தூர் மலைக்கு, செவ்வாய்க்கிழமை (04) சென்று நிலைமைகளை கள ஆய்வுக்கு உட்படுத்திய போது, அங்கு குழுமியிருந்த பௌத்த தேரர்கள், விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

பாதுகாப்புக்கு நின்றிருந்த பொலிஸாரிடம், நீதிபதி கடிந்துகொண்டதன் பின்னர், தேரர்கள் பூஜைகளை கைவிட்டு அங்கிருந்து கலைந்துச் சென்றனர்.

நாட்டில் பௌத்த மதத்துக்கு முதலிடம் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை; அரசியலமைப்பிலும் அது தெட்டத்தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், சிறுபான்மையினங்களின் மனங்களை நோகடிக்கும் வகையில் சில பிக்குகள் நடந்துகொள்வது வேதனையளிக்கிறது.

எனினும், குருந்தூர் மலையில் நீதிமன்றத்தின் உத்தரவை மதிக்காது விகாரை கட்டப்பட்டுள்ளதா, இல்லையா என்பதற்கெல்லாம் நீதிமன்றமே பதில் சொல்லும். உத்தரவை மீறி கட்டப்பட்டுள்ளது என நீதிமன்றம் ஒருவேளை தீர்ப்பளித்தால், அவை இடித்தழிக்கப்படுமா என்றால், 'இல்லை' என்பதே பதிலாகும்.

உத்தரவுக்கு முன்னால் மதமே முன்னிற்கின்றது. எவ்வாறாக இருந்தாலும் 'இடித்தழிக்க முடியாது' என்றெல்லாம் பின்னர் வியாக்கியானம் செய்வர். எந்த மதங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், மதச்சின்னங்களை இழித்தழிக்கக் கூடாது. குருந்தூர் மலையில் அது தலைகீழாக இடம்பெற்றுள்ளது.

எனினும், ஒருசில பிக்குகளின் நடவடிக்கைகளை பார்க்குமிடத்து, பௌத்தர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும். இனங்களுக்கு இடையில் குரோதங்களை ஏற்படுத்தும் வகையிலான வெறுக்கத்தக்க பேச்சு, போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்படல், பாலியல் துன்புறுத்தல்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் இவ்வாறு அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஆகையால், சிந்தனையில் மாற்றம் வேண்டும்; இனவாத சிந்தனைகள் நெருடிக் கொண்டே இருந்தால், ஏற்பட்ட புண் ஆறாவே ஆறாது என்பதை நினைவூட்டுகின்றோம்.



தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

நம்மவர்களில் பலர் நாட்டை விட்டு வெளியேறி, அந்நிய நாடுகளுக்குச் சென்று, அங்கேயே வாழ்வதால், வாழ்க்கையின் நடைமுறைகள், கலாசாரங்கள் மாறிவிடுகின்றன.

சிலர், தமது தாய் மொழியை கொச்சையாகப் பேசி, தாம் குடியேறிய நாடுதான் தமது தாய்நாடு போல தங்களை மாற்றி விடுகின்றார்கள். அவர்களின் பிள்ளைகளும் தமது தாய் மொழியின் வனப்பு, பேச்சின் தன்மை எதுவும் புரியாது, குடியேறிய நாட்டின் மொழியே தமது தாய் மொழி என எண்ணிக் கொள்கின்றார்கள்.

தாய் நாட்டுக்கு வந்தால், பேரன், பேத்தியுடன் தாய்மொழியில் பேச முடியாது போக, பெற்றோர் மொழி பெயர்ப்பாளராக மாறிவிடுகின்றனர்.

தான் குடியேறிய நாட்டுக்கு விசுவாசமாகவும் அந்த நாட்டின் மொழியை கசடறவும் கற்று பேசவும் வேண்டும். அதற்காகத் தாய் மொழியை மறந்து விட வேண்டுமா? தாய் மொழியை ஒருபோதும் மறவாதீர்கள்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

தமிழரசுக் கட்சியின்

# தலைமை மாற்றத்தின் அவசியம்



புருஜோத்தமன் தங்கமயில்

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக மாவை சேனாதிராஜாவை தொடர்ந்தும் பேணுவதற்கான முயற்சிகள், தமிழரசுக் கட்சிக்கு வெளியில் இருந்து சில தரப்புகளால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் (DTNA) சிரேஷ்ட தலைவர்கள், அண்மைக்காலமாக அந்த முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவராக இன்னமும் பதவி வகித்துவரும் இரா. சம்பந்தன், வயது மூப்பால் உடலளவில் தளர்ந்து போயிருக்கின்றார்.

அதுபோலவே, மாவை சேனாதிராஜாவும் முன்னரைப் போலல்லாது வயது மூப்பால் ஏற்படும் உபாதைகளால் அல்லற்படுகிறார். அப்படியான நிலையில், தமிழ்த் தேசிய அரசியலில் இன்னமும் முதன்நிலையில் இருக்கும் கூட்டமைப்பினதும் தமிழரசுக் கட்சியினதும் தலைவர்கள் இருவரும் செயற்படும் நிலையில் இல்லாது இருப்பது என்பது, தமிழ்த் தேசிய அரசியலில் பெரும் பின்னடைவாகும்.

குறுகிய காலத்துக்கு பிரதித் தலைவர்களோ, வேறு யாரோ கூட்டமைப்பையோ, தமிழரசுக் கட்சியையோ வழிநடத்த முடியும். ஆனால், எப்போதும் 'பிரதிகள்' ஓர் அரசியல் தளத்தில் முழுமையான ஆளுமையை செலுத்த முடியாது. உறுதியான தலைமைத்துவம் இல்லாத அரசியல் தரப்பு, குழப்பங்களால் நிறையும். அது, பொது எதிரிக்கும் ஏனைய கட்சிகளுக்கும் அதிக வாய்ப்புகளை வழங்கும்.

கூட்டமைப்பின் தலைவர் (பாராளுமன்றக் குழுத் தலைவர்) சம்பந்தன், பாராளுமன்ற அமர்வுகள் தொடங்கி, எந்தவித அரசியல் செயற்பாடுகளிலும் நேரடியாகச் சென்று பங்கேற்க முடியாத மூப்பால் அல்லற்படுகிறார். அவரது அரசியல் செயற்பாடு என்பது, அவரது வதிவிடத்தில் நிகழும் சந்திப்புகள் என்ற அளவில் சுருங்கிவிட்டது. அது, பெரும் வெற்றிடத்தை இலங்கை அரசியலிலும் தமிழ்த் தேசிய அரசியலிலும் ஏற்படுத்தி இருக்கின்றது.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தளவில், உத்தியோகபூர்வமாக மாவை சேனாதிராஜாதான் இன்னமும் தலைவராக இருக்கிறார். ஆனால், அவர் கட்சியின் தொகுதிக் கிளை உறுப்பினர் ஒருவர் கொண்டிருக்கின்ற அதிகாரத்துக்கு ஒத்த அதிகாரத்தையே கொண்டவர் போல செயற்படுகின்றார். அவரின் கருத்துகள், கட்சிக்குள் எந்தத் தரப்பாலும் உள்வாங்கப்படுவதில்லை; மதிக்கப்படுவதும் இல்லை.

அவரை தலைமைத்துவத்தில் இருந்து மாற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டதான உணர்வு, தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டு சில ஆண்டுகளாகின்றன. கட்சியின் பிரதித் தலைவர், செயலாளர் தொடங்கி பெரும்பான்மையினர், "மாவை சேனாதிராஜா தலைமைத்துவ ஆளுமையற்று இருக்கின்றார்" என்று பொதுவெளியில் குற்றஞ்சாட்டியும் இருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் முதன்நிலைக் கட்சியின் தலைமைத்துவம், செயற்பாட்டு ஆளுமையின்றி இருப்பதாக, சொந்தக் கட்சியினரே கூறிவிட்ட பின்னர், அந்தக் கட்சி மீதான அபிமானத்தை எப்படி மக்களிடம் வளர்ப்பது என்ற கேள்வி எழுகின்றது. அத்தோடு, மதிப்பிறக்கம் செய்யப்பட்ட ஒருவரின் கூற்றுகளை, தென் இலங்கையோ, சர்வதேசமோ கண்டு கொள்ளுமா?

இவ்வாறான சாதாரண கேள்விகளுக்கே பதில் இல்லை என்கிற நிலையில், மாவை சேனாதிராஜாவை தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்தில் தொடர முன்னெடுக்கப்படும் முயற்சிகள், தமிழரசுக் கட்சியை இன்னும் மோசமாக அழிக்கும் முயற்சிகளாகவே பார்க்கப்பட வேண்டியிருக்கின்றது.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் (DTNA) சிரேஷ்ட தலைவர்களில் ஒருவர், சம்பந்தனை கொழும்பிலுள்ள அவரது வதிவிடத்தில், இரண்டு தடவைகள் அண்மையில் சந்தித்து பேசியிருக்கிறார். இதன்போது, மாவை சேனாதிராஜாவை தமிழரசுக் கட்சியின் தலைவராக இன்னும் சில காலத்துக்கு பேணுமாறு கோரியிருக்கின்றார்.

சம்பந்தனைப் பொறுத்தவரையில், அவரைச் சென்று யார் சந்தித்து என்ன பேசினாலும், அதைக் கேட்டுக் கொண்டிருப்பார். ஆரம்பம் முதல் அவர் அந்த அணுகுமுறையைக் கையாண்டு வந்திருக்கிறார். அப்படித்தான், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் சிரேஷ்ட தலைவரின் கருத்துகளையும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இதையடுத்து, குறித்த தலைவர், மாவை சேனாதிராஜாவிடம் சம்பந்தரோடு தான் பேசிய விடயங்களைக் கூறி, அவருக்கு தென்பளித்து இருக்கிறார். தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்தில் இருந்து, விரைவிலேயே தான் மாற்றப்படப்போகிறோம் என்ற ஏமாற்றத்தோடு இருக்கும் மாவை சேனாதிராஜாவுக்கு, குறித்த தலைவரின் நம்பிக்கை வார்த்தைகள் வரமாக அமைந்திருக்கும். அந்த நம்பிக்கை வார்த்தைகளை உள்வாங்கிய மாவை சேனாதிராஜா, தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தை கொழும்பிலுள்ள சம்பந்தனின் இல்லத்தில் கூட்டினார்.

ஆனால், கூட்டம் ஆரம்பித்த தருணத்திலேயே, "எந்தவித அவசர காரணங்களும் இல்லாத நிலையில், ஏன் அரசியல் குழு இப்போது கூட்டப்பட்டு இருக்கிறது" என்று சம்பந்தன், மாவை சேனாதிராஜா உள்ளிட்டவர்களை நோக்கி கேட்டிருக்கிறார். அத்தோடு, அவர் ஒரு மணித்தியால நேரம் வரையில் பேசியிருக்கிறார். அதையடுத்து, மாவை சேனாதிராஜாவும் வெகுநேரம் பேசியிருக்கிறார். இருவரும் பேசி முடித்ததும் கூட்டம் முடிவுக்கு வந்திருக்கின்றது.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் சிரேஷ்ட தலைவரின் பேச்சைக் கேட்டு, பெரும் நம்பிக்கையோடு கொழும்பு சென்ற மாவை சேனாதிராஜா, ஏமாற்றத்துடன் யாழ்ப்பாணம் திரும்பியிருக்கிறார்.

தமிழரசுக் கட்சி தனித்து நிற்பதோ, தேர்தலை எதிர்கொள்வதோ ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியில் அங்கம் வகிக்கும் புளொட், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் உள்ளிட்ட கட்சிகளை வெகுவாக பதிக்கும். அதுவும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தாங்கள் தான் என்று அந்தக் கட்சிகள் சொல்லிக் கொண்டாலும், அவர்களை முழுமையான தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை.

தேர்தல் திணைக்களத்தில், ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி (DTNA) என்ற பெயரை தமிழ்த் தேசிய கூட்டணியாக (TNA) மாற்ற முன்னெடுக்கப்பட்ட முயற்சியும் தோல்வியில் முடிந்திருக்கின்றது. அவ்வாறான நிலையில், தமிழரசுக் கட்சி இன்றி, தனித்து நின்றால் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியால் தேர்தலில் வெற்றிபெற முடியாது என்கிற நிலை உணர்ந்து, எப்படியாவது தமிழரசுக் கட்சியை இணைத்துக் கொள்ளும் முயற்சிகளை ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைவர்கள் முன்னெடுக்கிறார்கள்.

அதாவது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, வீட்டுச் சின்னம் என்ற நிலையை மாற்றி, ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணிக்குள் தமிழரசுக் கட்சியை கொண்டுவந்து, புதிய சின்னத்தில் தேர்தல்களை எதிர்கொள்ளல் என்ற திட்டம் இதுவாகும். அப்படியாக நிகழ்ந்துவிட்டால், தங்களை ஒத்த கட்சியாக தமிழரசுக் கட்சியையும் நடத்தலாம். அதனை வைத்துக் கொண்டு தேர்தல்களில் வென்றும் விடலாம் என்பது எண்ணம். அதற்காக, தங்களால் கையாளப்படக்கூடிய ஒருவர், தமிழரசுக் கட்சியின் தலைவராக தொடர வேண்டும். அதற்கு, மாவை சேனாதிராஜாவை விட்டால் வேறு ஆட்கள் இல்லை.

எதிர்வரும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில், மாவை சேனாதிராஜாவை முதலமைச்சர் வேட்பாளராக முன்னிறுத்துவதற்கு தாங்கள் முன்னிற்போம் என்று யார் கூறினாலும் அவர்களோடு இணக்கமாக இருக்க மாவை தயாராக இருக்கிறார். அந்தத் துருப்புச் சீட்டைக் கொண்டே ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியினர், தங்களை ஒத்த கட்சியாக தமிழரசுக் கட்சியை வளைக்க முயல்கிறார்கள். அதற்கு, அவர்களுக்கு மாவை சேனாதிராஜா தலைவராக தொடர்வது முக்கியம்.

தமிழரசுக் கட்சியில் தலைமைத்துவ மாற்றம் என்பது தவிர்க்க முடியாதது. கூட்டமைப்பின் தலைவர் என்ற அடையாளம் சம்பந்தனோடு போய்விடும். அதன்பின்னர், அவ்வாறான தலைமைத்துவம் இருக்காது.

அப்படியான நிலையில், தமிழரசுக் கட்சி தன்னை நிலை நிறுத்துவதற்கும் செயற்பாட்டு அரசியலில் முன்னோக்கிப் பயணிப்பதற்கும் ஆளுமையுள்ள தலைவர் ஒருவரை கண்டு அடைய வேண்டும். அது, தேர்தல் அரசியலுக்குள் மாத்திரம் கட்சியைச் சுருக்கி, மக்களிடம் இருந்து அன்னியப்படும் வேலைகளைச் செய்யாத, பிரதேச வாதங்கள் கடந்த செயற்பாட்டாளரை தலைவராக ஏற்க வேண்டும்.

மாறாக, ஓய்வூதியர்களின் தங்குமிடமாக கட்சியின் செயற்பாட்டுக் குழுவைப் பேணுவது என்பது, கட்சிக்கும் தமிழ் மக்களுக்கும் செய்யும் துரோகமாகும். ஏனெனில், தமிழரசுக் கட்சியையும் வீட்டுச் சின்னத்தையும் பெரும் விமர்சனங்களோடும் மக்கள் தங்களின் முதன்மைக் கட்சியாக இன்றளவும் முன்னிறுத்தி இருக்கிறார்கள். அப்படியான நிலையில், அதற்கான அர்ப்பணிப்பை அந்தக் கட்சி வெளிப்படுத்த வேண்டும்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை (08) யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கின்றது. இதன்போது, கட்சியின் யாப்பில் சில திருத்தங்களைச் செய்வது தொடர்பில் ஆராயப்பட இருக்கின்றது. காலத்துக்கு ஏற்ப, கட்சியின் யாப்பில் மாற்றங்களைச் செய்யத் தயாராவது போல, காலத்தில் தேவை உணர்ந்து, தலைமைத்துவ மாற்றத்தையும் தமிழரசுக் கட்சி செய்ய வேண்டும்.

இல்லையென்றால், சுயநலவாதிகளும் சிறு குழுக்களும் தங்களின் தனிப்பட்ட நலனுக்காக, தமிழரசுக் கட்சி என்ற தந்தை செல்வாவின் தீர்க்கதரிசனத்தோடு எழுந்த கட்சியை சிதைத்துவிடுவார்கள்.

## கடிதங்கள்

### ஆபத்தான பயணம்



மட்டக்களப்பு, கோறளைப்பற்று தெற்கு, கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட திகிலிவட்டை செல்லும் ஆற்றைக் கடக்கும் படகுப் பாதை, மூன்று மாதங்களாக இயங்காத காரணத்தால், பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

திலிகிவட்டை, கோராவெளி, குடும்பிமலை, பெரியவட்டுவான் உட்பட பல கிராமங்களைச் சேர்ந்த நுற்றுக்கணக்கான பொது மக்கள் தினமும் இந்தப் பாதை ஊடாகவே பயணம் செய்கின்றனர்.

திகிலிவட்டை அரச தமிழ் கலவன் பாடசாலையில் தரம் 11 வரை வகுப்புகள் காணப்படுவதால் அப்பிரதேசத்திலிருந்து உயர்தரக் கல்விக்காக மாணவர்கள் குறித்த ஆற்றைக் கடந்து, சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலயத்துக்கு படகு முலமே செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது. இவர்களின் சீருடைகள் அழுக்கான நிலையிலும் பாதணிகள் அணிந்து செல்வதிலும் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

படகுப் பாதையின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்த நிலையிலும் பாதையை இயங்க வைப்பதில் பிரதேச சபை நிர்வாகம் அக்கறையின்றி செயற்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனையவர்களிடம் சேவைக் கட்டணமாக படகுப் பாதையில் 20 ரூபாய் அறவிடப்பட்டது. ஆனால், தற்போது இயந்திரப் படகு சேவைக்கு பொதுமக்களிடம் 50 ரூபாய் அறவிடப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக கோறளைப்பற்று பிரதேச சபை செயலாளர் சன்முகநாதன் நவநீதனிடம் கேட்டபோது, இன்னும் ஒரிரு தினங்களில் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவரின் பங்குபற்றலுடன் படகுப் பாதை சேவை மீள ஆரம்பிக்கப்படும் என்றார்.

பேரின்பராஜா சபேஷ்

# மலையகமும் பாலின சமத்துவமின்மையும்





சொக்கலிங்கம் லோஜினி
இரண்டாம் வருடம்,
ஊடகக்கற்கைகள் துறை

தேயிலை என்பது, ஓர் உற்சாக பானம் தயாரிக்கப் பயன்படும் ஓரிலை. இது வெளியுலகம் அறிந்த கருத்தாகும். அந்தத் தேயிலையின் வலிகளும் அதிகார அட்டைகளின் குருதி உறிஞ்சல்களும், தேயிலையின் உயிர்ப்பலிகளும் குருதி தியாகங்களும் மறைக்கப்பட்ட மர்மங்களாகின்றன. இதைத் தாண்டி மலையக சமூகம் நிலைத்துள்ளது. இந்நிலைத்திருப்பின் பின்னும் பல வழிகளும் வேதனைகளும் வடிந்துள்ளன. இதைத் தாண்டி அச்சமுகத்துக்குள்ளேயே அடக்குமுறைகளும் ஒடுக்கு முறைகளும் ஒளிந்திருக்கின்றன. இங்கு, பெண் அடிமைத்தனம் பேசப்படாத, பேசப்பட வேண்டிய ஒரு சவாலாக காணப்படுகின்றது.

முக்கியமாக தேயிலையை நம்பி வாழ்க்கை நடத்தும் சமூகத்தில் தேயிலைத் துறையிலே அடிமைத்தனம், பாலின சமத்துவமின்மை என்பன இடம்பெறுகின்றது. இவை பெண்ணை இலக்காக வைத்தே நடைபெற்று வருகின்றன.

இதனடிப்படையில் ஆரம்பத்தில் தொல்காப்பியமே தந்துவிட்ட பெண்ணடிமை தொடர்ந்தும் மாறாமல் மலையக சமூகத்திலும் பெண் அடிமைத்தனம் தொடர்ச்சியாகிவிட்டது.

பால் என்பது மனிதர்களைப் பெண் அல்லது ஆணாக வரையறுக்கும் உயிரியல் பண்பை குறிக்கிறது. பாலினம் என்பது சமூக ரீதியாக கட்டமைக்கப்பட்ட பாத்திரம், உறவு, ஆளுமை பண்புகள், அணுகுமுறைகள், நடத்தைகள், மதிப்புகள், செல்வாக்கு ஆகியவற்றினை வரிசைப்படுத்தி சமூகம் தந்த அடையாளமாகும்.

பாலின சமத்துவம் என்பது குறித்த உரிமைகள் பொறுப்புகள் மற்றும் வாய்ப்புகள் அவர்கள் ஆணா, பெண்ணா என்பதைக் குறித்துப் பாகுபாடு காட்டக் கூடாது என்பதாகும்.

இவற்றைத் தாண்டி எமது முன்னோர்கள் இன, மத, மொழி பேதமின்றி விதைத்த பெண்ணடிமையானது இன்று பாலின சமத்துவமின்மை என்ற பெயரில் உருமாறி உள்ளது.

இவ்வாறான பாலின சமத்துவமின்மை எவ்வாறு பெருந்தோட்ட தேயிலை தொழில்துறையில் காணப்படுகின்றது என்பதை நோக்குவோம்.

அதிக நேர வேலை மலையகப் பெண்கள், ஆண்களை விட அதிகமான நேரம் தேயிலைத் தோட்டத்தில் பணிபுரிகின்றனர். கொழுந்து பறிக்க செல்லும் ஆண்கள் காலை 6.30 மணியளவில் பிரட்டுக்களம் (வேலை பகிரப்படும் இடம் ) சென்று காலை 10.00 அல்லது 11.00 மணிக்கிடையில் தொழில் முடித்து வீடு சென்று விடுவர். ஆனால் பெண்கள் காலை 8.00 மணியளவில் தொழிலுக்கு சென்றால் மாலை 1.00 மணிக்கு தான் வீடு திரும்பி பகல் உணவு இடைவேளையை முடித்துக் கொண்டு, இரண்டு மணியளவில் தேயிலை மலைக்கு மீண்டும் செல்வார்கள். அதுவும் தூர மலைகளாக இருந்தால் 1 மணிக்கு வீடு திரும்பாமல் மலைகளில் தேயிலை அடிவாரத்தில் அமர்ந்தே பகல் உணவை உண்பார்கள்.

இரண்டு மணியளவில் தேயிலை மலைக்குச் சென்று மீண்டும் 5.30 மணியளவில் வீடு திரும்புவார்கள். கிட்டத்தட்ட ஆண்களை விட பெண்கள் 4 மணித்தியாலயம் அதிகமாக பணிபுரிகின்றனர். அதேபோல் புல் வெட்ட செல்லும் ஆண்களும் 12.00 மணியுடன் வீடு திரும்புவார்கள். ஆனால் புல் வெட்டச் செல்லும் பெண்கள் 5.00 மணிக்கு தான் வீடு திரும்புவார்கள். இந்தப் புல் வெட்டும் தொழிலுக்கு ஓய்வூதியம் பெற்ற பெண்களே அனுமதிக்கப்படுவர்.

மேலும் பெண்கள் தங்களது சக்திக்கு மீறிய சுமைகளை சுமந்து கொண்டு வருகின்றனர். தேயிலை பறித்து அதன் நிறைகள் கணக்கெடுக்கப்படும். ஒரு பெண் 18 கிலோ கிராம் தேயிலை பறித்தால் மட்டுமே அவளுக்கு அந்த நாளுக்கான முழுமையான சம்பளம் வழங்கப்படும். ஆண்கள் 12 கிலோ கிராம் தேயிலை பறித்தால் முழுநாள் சம்பளம் வழங்கப்படும் இந்த ஊதியத்திலும் பாலின வேறுபாடு காட்டப்படுகின்றது. 18 கிலோ கிராம் தேயிலை என்பது எவ்வாறான ஒரு சுமை என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியும்; அதனையும் சுமந்து கொண்டு மலை உச்சிகளில் நடப்பார்கள்.

பறித்த கொழுந்தை நிறை எடுப்பதற்காக ஒரு பாரமான இரும்பை, மலைக்கு காவி செல்லவும் பெண்களே அமர்த்தப்படுவர். நிறை எடுத்தபின், கொழுந்து தரம் பிரிக்கப்படும் அங்கும் பெண்களே தரம் பிரிக்கும் பணியில் ஈடுபடுவார்கள்.

மலையகத்தில் கொழுந்து பறித்தல் மட்டுமின்றி, தேயிலை சார் அலுவலகத் தொழில்கள் அதிகமாக உள்ளன. மேலும், கொழுந்து பறிக்கும் இடத்திலேயே மேற்பார்வையாளர்கள், தொழில் பங்கிடுபவர்கள் என சில தொழில் நிலைகள் உள்ளன. இத்தொழில் நிலைகளுக்கு பெண்கள் அனுமதிக்கப்படுவதே இல்லை. பெண் கல்வியறிவை பெற்றிருந்தாலும் கூட, இத்தொழில்களில் ஆண்களே அனுமதிக்கப்படுவார்கள். ஓய்வூதியங்களை ஒரு பெண் பெற வேண்டுமாயின் ஆணின் துணையின்றி பெறவே முடியாது.

இப்படி கல்வியறிவு உள்ள பெண்கள் கூட, ஆணின் துணையின்றி அலுவலக வேலைகளை முடிக்க முடியாது. தோட்டப்புறங்களில் கிட்டத்தட்ட ஒரு தோட்டத்திற்கு நான்கு தலைவர் நியமிக்கப்படுவார். அது கட்சிகள் அடிப்படையில் நிகழும். இத்தலைமை பொறுப்பு ஒரு நாளும் பெண்ணுக்கு வழங்கப்படுவதில்லை. ஆனால், தலைமை பொறுப்பை ஏற்பவர்களுக்கு கல்வியறிவு கணக்கில் எடுக்கப்பட மாட்டாது. ஆனால்: கல்வியறிவுள்ள பெண், ஏதாவது ஒரு வேலையாக அலுவலகம் செல்ல நேர்ந்தால், தலைவர்களின் துணையின்றி ஏதுமே செய்ய முடியாது. கையொப்பமே இடத்தெரியாத தலைவர்களும் மாகாண, மாவட்டத்திற்கு வித்தியாசம் தெரியாத ஆண் தலைமைகள் இன்னமும் மலையகத்தை வீழ்த்திக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

மலையகப் பெண்கள் எதிர்கொள்ளும் பால்நிலை சார்ந்த சவால்கள் அதிகம் பேசப்படுவதில்லை. காரணம் அவர்களின் வாழ்க்கையை வைத்து அரசியல் செய்பவர்களாக பலர் இருக்கின்ற காரணத்தால் பேசப்படுவதில்லை எனலாம்.

பெருந்தோட்டத்துறையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே பாரியளவான சம்பள வேறுபாடும் காணப்படுகின்றது. ஆண்களை விட பெண்கள் குறைவான ஊதியத்தையே பெறுகின்றனர்.

பெருந்தோட்டத்துறை பெண்களுக்கு எந்தவித சலுகை அடிப்படையிலான ஊதியங்களோ பாதுகாப்போ வழங்கப்படுவதில்லை. 200 வருடங்களைக் கடந்தும் இன்றும் தங்களது சம்பளத்துக்காக போராட வேண்டிய அவல நிலை மலைநாட்டு பெண்களிடையே காணப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் சில தொழிற்சங்கங்கள் போராடி, பேரம் பேசி ஒரு குறிப்பிட்ட சம்பள ஏற்றத்தைப் பெற்றுக்கொடுத்தாலும் இன்றுவரையும் மலையகப் பெண்களுக்கு உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் கிடைக்கவில்லை.

உலகில் எவ்வித பயிற்சியும் பாதுகாப்பு நடவடிக்கைகளும், காப்புறுதியும்,பொறுப்புக் கூறலுமின்றி வழங்கப்படுகின்ற ஒரே ஒரு தொழில் தேயிலை தொழிலாகும். மலையகப் பெண்களிடம் எவ்வித கல்வித் தகைமையோ, ஆரம்ப அறிவோ, அனுபவமோ இன்றி பரம்பரை பரம்பரையாக ஒரே தொழிலை, ஒரே மாதிரியாக, ஒரே வகையாக ஒரே தோட்டத்தில் வேலை செய்து வருகின்றனர். தனது வாழ்நாள் முழுவதையும் அங்கேயே அர்ப்பணித்து அரும்பாடுப் பட்டு உழைகின்றனர்.

இங்கு வேலை செய்யும் பெண்கள் அற்பசொற்ப சலுகைகளுக்காக பல போராட்டங்களையும் வலிகளையும் இன்னல்களையும் கடந்து வருகின்றனர். இப்பெண்கள் தொழில் செய்வதற்கான பொருத்தமான குடைகள், உடைகள் கூட வழங்கப்படாத நிலையில் வேலையில் ஈடுபட்டு இந்நாட்டுக்காகவும் வீட்டுக்காகவும் உழைக்கின்றனர்.

அட்டை கடிகளுக்குள் அல்லல்படும் இத்தோட்டத் தொழிலாளிகளான பெண்களின் நிலை பற்றி எவரேனும் சிந்திப்பதாக இல்லை. ஏன் இந்த மலையகப் பெண்கள் கூட வாய்மூடி மௌனமாகவே இருக்கிறார்கள். காரணம்டு எதிர்த்து கதைத்தால் தேயிலைத் தொழிலும், வாழ்கின்ற லயத்து அறைகளும் போய் விடுமோ என்ற பயத்திலாகும். அல்லது இனிவரும் பரம்பரையாவது படித்து நல்ல நிலைக்கு வர வேண்டும் என்ற நிதானமான தீர்க்கதரிசன நோக்கமா என்று ஒன்றும் புரியவில்லை.

இந்தப் பால்நிலை அசமத்துவத்தை ஒழித்து, பெண்களுக்கான சமத்துவத்தினை வழங்கி, மலையக சமூகத்தில் உள்ள பெண்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான பல நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.



# சவக்குழிகள் தோண்டும் கைங்கரியங்கள்

## தடுக்காவிடின் பூண்டோடு அழிவு நிச்சயம்



சுப்பிரமணியம் பாஸ்கரன்






சுற்றுச் சூழலைப் பாதிக்கும் வகையிலான மனிதனது செயற்பாடுகள், நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இதனால் இயற்கை சமநிலை பாதிக்கப்படுவதுடன், உலகில் மனிதன் உட்பட உயிரினங்களின் வாழ்வும் கேள்விக்குறியாக்கப்படுகின்றன.

சில மனிதர்களின் பேராசை காரணமாக, சுற்றுச் சூழல் பாதிப்பு ஏற்பட்டு, பூமியில் உயிரினங்கள் வாழ வகையின்றி அழிவடைந்து வருகின்றன. இத்தகைய நிகழ்வுகள், இன்று எமது கண்முன்னே நடந்தேறி வருகின்றன.

குறிப்பாக, கடல் மற்றும் கடற் கரையோரப் பகுதிகள் மாசடைதல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இதனால் கடல் வாழ் உயிரினங்கள் மற்றும் கரையோர நீர் நிலைகளை அண்டி வாழும் அரியவகை உயிரினங்கள் அழிவடைந்து வருகின்றன.

கடற்கரையோரங்களில் கழிவுகளை கொட்டுவது, தற்போது அதிகளவில் காணப்படுகின்றது. இவ்வாறு கடலிலும் கரையோரங்களிலும் கழிவுகளை வீசுவதில், மனிதனது பங்கு பெரும் பங்காக இருக்கின்றது.

அதாவது, கரையோர பகுதிகளில் வீசப்படும் கழிவுகளில் 80 சதவீதமான கழிவுப்பொருட்கள், இலகுவில் உக்கும் தன்மையற்ற பிளாஸ்டிக் குப்பைகள் ஆகும். இதனை விட இயந்திரப் படகுகள், பாரிய கப்பல்களில் இருந்து வெளிவிடப்படுகின்ற எண்ணெய் கழிவுகள் - கசிவுகள் என்பனவும் கடலில் பரவுவதன் மூலம், கடல் வாழ் உயிரினங்கள் அழிவடைகின்றன.

அத்துடன், வடகடல் பகுதிகளில் இந்திய இழுவை படகுகளின் தொழில் நடவடிக்கைகள், ஏனைய தடைசெய்யப்பட்ட கடல் தொழில்கள் என்பவற்றால் கடல் வளம் அழிக்கப்படுகின்றது. தற்போது வெளிநாட்டு அன்னியச் செலாவணியை எதிர்பார்த்து, சிறுகடல் பகுதிகளில் உருவாக்கப்பட்டுள்ள அட்டைப் பண்ணைகளாலும் பாதிப்புகள் ஏற்படுவதாக குறிப்பிடப்படுகிறது

அதாவது, சிறுகடல் பகுதிகளை கூறுபோட்டு, பட்டிகளாக அடைக்கப்பட்டு அட்டை வளர்ப்புகள் மேற்கொள்ளப்படுவதால் இயற்கையாக மீன் இனங்கள் உருவாகும் சூழல் அற்றுப் போவதுடன், குறித்த பகுதிகளில் உள்ள வளங்களும் அழிவடைந்து வருகின்றன என கடற்தொழிலாளர்கள் தமது தொழில் இழப்புகளுக்கான காரணம் குறித்துத் தெரிவிக்கின்றார்கள்.

குறிப்பாக, கரையோரங்களில் உற்பத்தியாகின்ற மீன், நண்டு, இறால் இனங்களின் உற்பத்தி குறைவடைந்து உள்ளதுடன் அழிவடைந்து உள்ளதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவை யாவற்றுக்கும் மேலாக, கிளிநொச்சி மாவட்டத்தின் ஆனையிறவு முதல் சுண்டிக்குளம், கல்லாறு வரையான கரையோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மணல் அகழ்வு, மிகமிக ஆபத்தான ஒன்றாக மாறியிருக்கிறது. காலாகாலமாக வாழும் அப்பகுதி மக்களின் இருப்பையே கேள்விக்குறியாக்கி இருக்கின்றது.

வடக்கு - கிழக்கில் உள்ள சிறுகடப்பரப்புகளையும் கடற் கரையோரங்களையும் உரியவாறு பாதுகாக்காது விட்டால், காலப்போக்கில் அப்பகுதிகளில் மக்கள் வாழ்வதை யாராலும் உறுதிப்படுத்த முடியாது.

வடபகுதியில் பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள சுண்டிக்குளம், கல்லாறு போன்ற பகுதிகளில் இடம்பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வுகள் காரணமாக, பெருமளமான கரையோர கண்டல் தாவரங்கள் அழிக்கப்படுகின்றன.

இதனால் பருவ காலங்களில் வெளிநாட்டு பறவைகளின் வருகை மற்றும் இயற்கை வாழ் உயிரினங்கள் அழிவடைந்தும் அற்றுப்போயும் வருகின்றன.

இவ்வாறான உயிரினங்களை பாதுகாக்கும் வகையில், கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சுண்டிக்குளம் தொடுவாய்க்கும் இந்திய பெருங்கடலுக்கும் இடையேயுள்ள குறுகிய இப்பிரதேசத்தில் 1938 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பறவைகள் சரணாலயமானது, ஆரம்பத்தில் 25,550 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டதாகக் காணப்பட்டது.

இப்பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள கரையோர பகுதிகளில் இருந்து நாளாந்தம் 80 - 100 ‘கியூப்’ மணல் ஆனையிறவு, குஞ்சுப்பரந்தன், கல்லாறு, சுண்டிக்குளம் பகுதிகளூடாக சட்டவிரோதமாக அகழ்ந்தெடுக்கப்பட்டு வருகின்றன.

அதாவது, சிறு கடற்கரையோரப் பகுதிகளில் இருந்து கண்டல் காடுகள் அழிக்கப்பட்டு, மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம், சட்டத்தை தடுக்க வேண்டியவர்களின் துணையுடனே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது, வேலியே பயிரை மேய்கின்ற நிலைமை தொடர்கின்றது.

இது எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்.

அதாவது, குறித்த கரையோரப் பகுதிகளிலே அயன மண்டல பசுமையான காடுகள், அயன மண்டல முட்புதர் காடுகள் என இருவகையான காடுகள் காணப்படுகின்றன.

அயன மண்டல உலர் கலப்பு பசுமையான காடுகள், பருவக்காற்று காடுகள் என்றும் குறிப்பிடப்படுகிறது. அதாவது, இக்காடுகள் பருவகால மழையுடன் உருவாகி நீண்ட வரட்சியை தாங்கிக் கொள்ளும் தன்மை கொண்டவையாகும். குறிப்பாக, வறட்சி காலங்களை தாக்கு பிடிக்கக்கூடிய மரங்கள், இக்காடுகளில் காணப்படுகின்றன.

அதேபோல், இப்பகுதியிலுள்ள அயன மண்டல முட்புதர் காடுகளில் உள்ள தாவரங்கள், அதிக வெப்பத்தை தாங்க கூடியவையாக இருக்கின்றன. இவற்றுள் சில தாவரங்கள் ஆவியாதலை தடுக்கும் வகையில் சிறிய இலைகளைக் கொண்டிருக்கும். அத்துடன் இலைகளுக்கு பதிலாக, முட்கள் காணப்படும். சில மரங்கள் தண்டுகளில் நீரை சேமித்து வைக்கின்றன. அதாவது பிரண்டை, கற்றாளை, கள்ளி வகைகள் என்பன குறிப்பிடக் கூடியவை.

கடற் கரையோரங்களை அண்டிய இவ்வாறான காடுகளில், வண்ணத்துப்பூச்சிகள், தும்பிகள், பறவையினங்கள் அதிக அளவில் வாழ்கின்றன. மண் அகழ்வின் ஊடாக, மேற்படி தன்மையுடைய காடுகள் அழிக்கப்படுவதால், அரிய வகை உயிரினங்களும் அழிவடைந்து வருகின்றன.

இதுவரை 120 தும்பி இனங்கள், 24 வண்ணத்துப்பூச்சி இனங்கள், 499 வரையான பறவையினங்கள் இந்தக் கடற்கரையோரங்களிலும் நீர் நிலைகளையும் அண்டி வாழ்வதாக இதுவரை கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறான கரையோரக் காடுகளை அழித்து, கரையோரங்களில் மேற்கொள்ளப்படுகின்ற மண் அகழ்வுகளால், அதாவது கடல் மட்டத்திலிருந்து, அதிக ஆழத்துக்கு மணல் அகழ்வு மேற்கொள்வதால், கடல் நீர் உட்புகுந்து நன்னீர், உவர்நீராக மாறுகின்றது.

இவ்வாறு, சுற்றுச் சூழலில் ஏற்படுத்தும் பாதிப்புகளை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை, உரிய தரப்பினர் எடுக்க வேண்டியது அவசியமாகும்.

மத்திய பிரதேசம்

# பழங்குடியின இளைஞர் மீது சிறுநீர் கழித்த கொடூரம்

மத்திய பிரதேசத்தில் பழங்குடியின இளைஞர் மீது சிறுநீர் கழித்த பாரதிய ஜனதாக கட்சியின் இளைஞர் அணி நிர்வாகி, தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

மத்திய பிரதேச மாநிலம் சித்தி மாவட்டத்தில் மதுபோதையில் இருந்த ஆதிக்க சமூகத்தைச் சேர்ந்த நபர், பழங்குடியின இளைஞரின் முகத்தில் சிறுநீர் கழித்தார். இந்தக் காணொளி கடும் கண்டனங்களுடன் சமூக



வலைதளங்களில் பரவியது.

இந்நிலையில், பழங்குடியின இளைஞர் மீது சிறுநீர் கழித்தவர், பா.ஜ.க இளைஞரணியை சேர்ந்த பிரவேஷ் சுக்லா என்பது விசாரணையில் தெரியவந்தது. இதனை தொடர்ந்து அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்க அம்மாநில முதலமைச்சர் சிவராஜ் சிங் சவுஹான் உத்தரவிட்டார்.

அதன் அடிப்படையில், பரவேஷ் சுக்லாவை கைது செய்த பொலிஸார் தேசிய பாதுகாப்பு சட்டம், எஸ்.சி. எஸ்.டி, வன்கொடுமை தடுப்பு சட்டம் உள்ளிட்ட கடுமையான பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தனர்.

கடலூர்



# எலியை விழுங்கி மயங்கிய பாம்பு

**எலிகளுக்காக வைக்கப்படும் விஷத்தை எலி சாப்பிட்டு மயங்கி நிலையில் இருக்கும்போது, அதனை பாம்பு விழுங்கிவிட்டால் இதுபோன்று மயக்கம் அடைந்து விடும்**

கடலூர் அருகே உள்ள திருச்சோபுரம் கிராமத்தை சேர்ந்தவர் நடராஜன். இவர் அலுமினிய வியாபாரம் செய்து வருகிறார். இவர் வீட்டு வாசலில் சாரைப்பாம்பு ஒன்று மயங்கிய நிலையில் கிடந்தது.

இந்த நிலையில், ஏழுமலை சமூக ஆர்வலரான செல்லாவிற்கு தகவல் கொடுத்தார். அந்தத் தகவலை தொடர்ந்து செல்லா அங்கு சென்று பார்த்தபோது மயங்கி நிலையில் கிடந்த பாம்பிற்கு தண்ணீர் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

அந்த பாம்பு அவர் கொடுத்த தண்ணீரை அழகாக குடிக்க தொடங்கியது. பிறகு பாம்பு தெளிவடைந்து விட்ட நிலையில் அந்தப் பாம்பை போத்தலில் பிடித்து பாதுகாப்பான இடத்தில் விட்டார். அதாவது எலிகளுக்காக வைக்கப்படும் விஷத்தை எலி சாப்பிட்டு மயங்கி நிலையில் இருக்கும்போது, அதனை பாம்பு விழுங்கிவிட்டால் இதுபோன்று மயக்கம் அடைந்து விடும் என செல்லா தெரிவித்தார்.

ராஜஸ்தான்

# ஓர் ஆட்டுக்குட்டிக்காக கோடியை மறுத்த மேய்ப்பவர்

ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த சுரு மாவட்டத்தில் உள்ள ஓர் ஆடு மேய்ப்பன், தனது ஆட்டுக்குட்டிக்கு விலையாக ஒரு கோடி ரூபாய் தந்த போதிலும் அதனை ஏற்றுக்கொள்ளாமல் மறுத்தது பலருக்கும் ஆச்சரியத்தை அளித்துள்ளது.

தாராநகர் மற்றும் சுற்றுப்பட்டு கிராமங்களில் தற்போது இந்த ஆட்டுக்குட்டியை பற்றியே தான் பேசி வருகின்றனர். ஒரு சில அறிக்கைகளின் படி, முஸ்லிம் சமூகத்தில் மிகவும் உகந்ததாக கருதப்படும் ஒரு சில எண்கள் இந்த ஆட்டுக்குட்டியின் வயிற்றில் இருப்பதாக சொல்லப்படுகிறது.

ராஜஸ்தானை சேர்ந்த ஆடு மேய்ப்பவரான ராஜூ சிங்குக்கு ஆட்டுக்குட்டியின் உடலில் இருக்கக்கூடிய அந்த எழுத்துக்களுக்கான அர்த்தம் ஆரம்பத்தில் புரியவில்லை. எனினும் முஸ்லிம் சமூகத்தை சார்ந்த ஒரு சிலரிடம் இது குறித்து கேட்டு தெரிந்த பிறகு, ஆட்டுக்குட்டியின் வயிற்றில் காணப்படும் ‘786’ என்ற எண்ணானது முஸ்லிம் சமூகத்தில் மிகவும் உகந்த ஒன்றாகவும், முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் கருதப்படுவது அவருக்கு தெரியவந்தது.

உத்தரப்பிரதேசம்

# பறந்த முத்தத்தால் நின்ற திருமணம்

உத்தரப்பிரதேசத்தில் சம்பல் பகுதியில் திருமண நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. திருமண நிகழ்ச்சிக்கு வந்திருந்த விருந்தினர்களை வரவேற்கும் போது மணப்பெண் பறக்கும் முத்தம் கொடுத்துள்ளார். அதே நேரத்தில் மணப்பெண்ணின் அம்மா சிகரெட் பிடித்து, வரும் விருந்தாளிகளின் முகத்தில் ஊதியுள்ளார். இந்தச் சம்பவம் மணமகனுக்கு அதிர்ச்சியளித்துள்ளது.

இருவரின் செயல்களால் விரக்தியடைந்த மணமகன் திருமணத்தை நிறுத்தியுள்ளார். இது குறித்து, மணமகனின் குடும்பத்தினர் கூறுகையில், அவர்கள் திருமண அரங்கிற்கு வந்தபோது வரவேற்பு வழங்கப்பட்டதாகவும், சிறிது நேரத்திலேயே மணப்பெண்ணின் தாயார் போதையில் இருந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

சிகரெட் பிடித்து விருந்தினர்கள் முகத்தில் ஊதியதாகவும் கூறினர். இதனால், எரிச்சலடைந்த மணமகன் இதற்கு மேல் திருமணம் செய்துகொள்ள முடியாது என்று கூறி திருமணத்தை நிறுத்தியதாக மணமகனின் தந்தை கூறியுள்ளார்.

# 10 ஆண்டுகளுக்கு பின் தூதர்கள் நியமனம்

துருக்கி-எகிப்து, 10 ஆண்டுகளுக்கு பின்னர் தூதர்களை மீண்டும் நியமித்தது. இந்த நடவடிக்கையானது இரு நாடுகளுக்கும் இடையே மீண்டும் ஒருமுறை இயல்பான உறவு ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டது என தெரிவித்து உள்ளது.


எகிப்து நாட்டில் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஜனாதிபதி முஹமது மோர்சி ஆவார். இவரை கடந்த 2013ஆம்



ஆண்டு அந்த நாட்டின் இராணுவம் ஆட்சியில் இருந்து அகற்றியது. இதற்கு துருக்கி கடும் எதிர்ப்பு தெரிவித்து. இதனால் எகிப்து மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் தங்களது தூதரக உறவை முறித்துக் கொண்டன.

கடந்த 10 ஆண்டுகளாக இரு நாடுகளின் உறவில் விரிசல் இருந்து வந்த நிலையில் தற்போது இயல்பு நிலை திரும்பி வருகிறது. அதன்படி துருக்கி நாட்டுக்கான எகிப்து தூதராக அம்ர் எல்ஹமாமி மற்றும் எகிப்துக்கான துருக்கி தூதராக சாலிஹ் முட்லு ஆகியோர் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

# பத்திரிகையாளர் மீது மிருகவெறி தாக்குதல்



ரஷ்யாவின் செச்செனியா குடியரசில் பிரபல பெண் பத்திரிகையாளர் ஒருவர் மிருகத்தனமாக தாக்கப்பட்டிருக்கும் செய்தியும், அது சம்பந்தமாக வந்திருக்கும் புகைப்படமும் உலகை அதிர்ச்சிக்குள்ளாக் கியிருக்கிறது.

‘நொவாயா கெசெட்டா’ எனப்படும் செய்தித்தாளின் பிரபல பத்திரிகையாளரான எலெனா மிலாஷினா, குரோஸ்னி நகருக்கு செவ்வாய்க்கிழமை காலை பயணம் செய்து கொண்டிருந்தபோது ஆயுதமேந்திய முகமூடி அணிந்தவர்கள் அவரை காரை இறக்கி, மிருகத்தனமாக தாக்கியுள்ளனர்.

# 60 வருடங்கள் தூங்காமல் வாழ்ந்து வரும் முதியவர்

நமக்கு ஒருநாள் தூங்கவில்லை என்றாலே பித்துப்பிடித்தது போல் ஆகிவிடுகிறது. ஆனால், ஒருவர் சுமார் 60 ஆண்டுகளாக தூங்காமல் இருக்கிறார். இப்படி இத்தனை வருடங்கள் தூங்காமல் இருக்க காரணம் என்ன என்பதை தெரிந்துகொள்ள பலர் ஆர்வமாக உள்ளனர்.

அவரது பெயர் தாய் என்கோக். வியட்நாம் நாட்டைச் சேர்ந்த இவருக்கு 80 வயதாகிறது. இவர் 1962-ஆம் ஆண்டிலிருந்து, அறுபது வருடங்களாக தூங்காமல் வாழ்ந்து வருகிறார். சிறுவயதில் இவருக்கு காய்ச்சல் வந்தபோது தூங்க முடியாமல் தவித்திருக்கிறார். அன்றிலிருந்து இத்தனை ஆண்டுகளாக தூங்காமலேயே



தனது வாழ்க்கையை ஓட்டி வருகிறார். இதுகுறித்து என்கோக்கின் குடும்பத்தினர்கள், நண்பர்கள், வீட்டின் அருகே வசிப்பவர்கள் எனப் பலரிடம் கேட்டாலும், அவர் தூங்கி நாங்கள் பார்த்ததேயில்லை என கூறுகிறார்கள்.

இது எப்படி சாத்தியம் என என்கோக்கின் உடலை பல மருத்துவர்கள் சோதித்துப் பார்த்துவிட்டார்கள். இவர் ஒருநாளாவது தூங்கி இருப்பார் என அவர்களாலும் நிரூபிக்க முடியவில்லை. இவர் நிரந்தரமாக தூக்கமின்மை நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இது மிக அரிதான நோய் என மருத்துவர்கள் நம்புகிறார்கள்.

# இரண்டாமிடத்துக்கு முன்னேறிய ஸ்மித், கமின்ஸ்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் அவுஸ்திரேலியாவின் ஸ்டீவன் ஸ்மித்தும், பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் அணித்தலைவர் பற் கமின்ஸும் இரண்டாமிடத்துக்கு முன்னேறியுள்ளனர்.



இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது போட்டியில் 144 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே ஆறாமிடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி இரண்டாமிடத்தை ஸ்மித் அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

கேன் வில்லியம்ஸன், 2. ஸ்டீவன் ஸ்மித், 3. மர்னுஸ் லபுஷைன், 4. ட்ரெவிஸ் ஹெட், 5. ஜோ றூட், 6. பாபர் அஸாம், 7. உஸ்மான் கவாஜா, 8. டரைல் மிற்செல், 9. திமுத் கருணாரத்ன, 10. றிஷப் பண்ட்.

குறித்த போட்டியில் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே நான்காமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி இரண்டாமிடத்தை கமின்ஸ் அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவிச்சந்திரன் அஷ்வின், 2. பற் கமின்ஸ், 3. ககிஸோ றபாடா, 4. ஜேம்ஸ் அன்டர்சன், 5. ஒலி றொபின்ஸன், 6. ஷகீன் ஷா அஃப்ரிடி, 7. நேதன் லையன், 8. ஜஸ்பிரிட் பும்ரா, 9. இரவீந்திர ஜடேஜா, 10. ஸ்டுவர்ட் ப்ரோட்.

இப்போட்டியில் 172 ஓட்டங்களைப் பெற்றதோடு, ஒரு விக்கெட்டைக் கைப்பற்றிய இங்கிலாந்தின் அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ், சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் ஐந்தாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி நான்காமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவீந்திர ஜடேஜா, 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. ஷகிப் அல் ஹஸன், 4. பென் ஸ்டோக்ஸ், 5. அக்ஸர் பட்டேல்.

## இன்று ஆரம்பிக்கிறது மூன்றாவது டெஸ்ட்:

# தொடரைத் தக்க வைக்குமா இங்கிலாந்து?

இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியானது லீட்ஸில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் அவுஸ்திரேலியா வென்றுள்ள நிலையில் தொடரைத் தக்க வைப்பதற்கு இப்போட்டியை கட்டாயம் வென்றாக வேண்டிய நிலையில் இங்கிலாந்து காணப்படுகின்றது.

அந்தவகையில் இங்கிலாந்து சார்பில் காயமடைந்த ஒலி போப் மற்றும் ஜேம்ஸ் அன்டர்சன், ஜொஷ் டொங்கை மொயின் அலி, கிறிஸ் வோக்ஸ், மார்க் வூட் ஆகியோர் பிரதியிட்டுள்ளனர்.

அவுஸ்திரேலிய அணியில் காயமடைந்த நேதன் லையன் மற்றும் ஜொஷ் ஹேசில்வூட்டை டொட் மேர்பி, ஸ்கொட் போலண்ட் ஆகியோர் பிரதியிடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.





## உலகக் கிண்ணத்துக்கு

# தகுதி பெறத் தவறிய சிம்பாப்வே

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெற சிம்பாப்வே தவறியுள்ளது.

புலவாயோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்கொட்லாந்துடனான சுப்பர் சிக்ஸ் போட்டியில் தோல்வியடைந்தமையைத் தொடர்ந்தே உலகக் கிண்ணத்துக்கு தகுதி பெற சிம்பாப்வே தவறியுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சிம்பாப்வே

ஸ்கொட்லாந்து: 234/8 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: மைக்கல் லீஸ்க் 48 (34), மத்தியூ குறொஸ் 38 (75), பிரண்டன் மக்முல்லன் 34 (34), ஜோர்ஜ் முன்சி 31 (52) கிறிஸ்டோபர் மக்பிரைட் 28 (45), மார்க் வாட் ஆ.இ 21 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷோன் வில்லியம்ஸ் 3/41, டென்டாய் சட்டாரா 2/46, றிச்சர்ட் நகரவா 1/42)

சிம்பாப்வே: 203/10 (41.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: றயான் பேர்ள் 83 (84), வெஸ்லி மட்ஹெவெரே 40 (39), சிகண்டர் ராசா 34 (40) ஓட்டங்கள். பந்துவீச்சு: கிறிஸ் சோல் 3/33, பிரண்டன் மக்முல்லன் 2/31, மைக்கல் லீஸ்க் 2/33, கிறிஸ் கிறேவ்ஸ் 1/29, மார்க் வாட் 1/36, ஃஸபயான் ஷரிஃப் 1/38)

போட்டியின் நாயகன்: கிறிஸ் சோல்

இந்நிலையில், இன்று பிற்பகல் 12.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நெதர்லாந்தை ஸ்கொட்லாந்து எதிர்கொள்ளவுள்ளதுடன், ஒன்பதாமிடத்துக்கான போட்டியில் ஐக்கிய அமெரிக்காவை ஐக்கிய அரபு அமீரகம் எதிர்கொள்ளவுள்ளது.

# ஆஷஸிலிருந்து விலகிய ஒலி போப்



எஞ்சிய ஆஷஸ் தொடரிலிருந்து இங்கிலாந்தின் உப அணித்தலைவரான ஒலி போப் விலகியுள்ளார்.

இரண்டாவது போட்டியின்போது தோட்பட்டை கழன்றமை காரணமாகவே சத்திரசிகிச்சை மேற்கொள்ள ப்படவிருப்பதன் காரணமாக போப் விலகியுள்ளார்.

இந்நிலையில், போப் இல்லாத ஸ்டூவர்ட் ப்ரோட் உப தலைவராகக் கடமையாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சம்பியனான பன்சேனை பாரி வித்தியாலயம்

■ வ. சக்தி

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மகளிர் கால்பந்தாட்ட அணிகளை ஊக்குவிக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் பன்சேனை பாரி வித்தியாலயம் சம்பியனானது.

வெபர் மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற 16 பாடசாலைகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் கடுக்காமுனை வாணி வித்தியாலயத்தை 3-0 என்ற கோல் கணக்கில் வென்று பாரி வித்தியாலயம் சம்பியனானது.



இத்தொடரின் மூன்றாமிடத்துக்கான போட்டியில் வாகரை கட்டுறிவு பாடசாலையை வென்று அம்பிளந்துறை கலைமகள் மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தைப் பெற்றது.

தொடரின் சிறந்த வீராங்கணையாக வாகரை கட்டுறிவு பாடசாலையின் எஸ். நந்தினி தெரிவு செய்தபட்டு செய்யப்பட்டு அவருக்கு ஒரு சைக்கிளும் பரிசாக வழங்கப்பட்டது.

சம்பியனான பாரி வித்தியாலயத்துக்கு 100,000 ரூபாயும், வாணி வித்தியாலயத்துக்கு 75,000 ரூபாயும், கட்டுறிவு பாடசாலைக்கு 50,000 ரூபாயும் வழங்கப்பட்டது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 06 ஜூலை 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.